தினமணி 03.02.2018

# டீஎன்பிஎல் ஆலையில் காவலர் தேர்வுக்கு பயிற்சி

கரூர், பிப்.2: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில் தமிழ்நாடு அரசு காவல் துறையில் இரண்டாம் நிலை காவலர் தேர்வுக்கான இலவசப் பயிற்சி வகுப்பு தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

நிறுவன மனிதவள அரங்கில் நடைபெற்ற முகாமுக்கு ஆலையின் பொது மேலாளர் (மனிதவளம்) பி. பட்டாபிராமன் தலைமை வகித்தார். முதுநிலை மேலாளர் (பாதுகாப்பு) பி.வி. தஞ்சராயன் வரவேற்றார்.

ஆலையின் செயல் இயக்குநர் (இயக்ககம்) எஸ்.வி. ஆர். கிருஷ்ணன் முகாமைத் தொடக்கி வைத்து பேசினார்.

பயிற்சி வகுப்பில் ஆலையைச் கற்றியுள்ள கிராமங்கள் மற்றும்பிறமாவட்டங்களைச் சேர்ந்த 150 பேர் பயிற்சி பெற உள்ளனர்.

இவர்களுக்கு உடல் தகுதித் திறன் தேர்விற்கான பயிற்சி வகுப்பு அனைத்தும் கல்வி வல்லுநர்களையும், உடற்கல்வி ஆசிரியர்களையும் கொண்டு வழங்கப்படுகிறது.

ஆலை மேலாளர் (மனிதவளம்) வி. ராஜாராம், முதுநிலை மேலாளர் (நிர்வாகம்) எஸ்.பெரியசாமி ஆகியோர் வாழ்த்தினர்.




முகாமில் பேசுகிறார் ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன். உடன் ஆலை அதிகாரிகள்.